தலைஞாயிறு நல்லாற்று வடிகால் மேம்பாட்டுத் திட்டம்.

300—(*வினா எண் 9416) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு நல்லாற்று வடிகாலை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோதையாறு மேம்பாட்டுத் திட்டம்.

301—(*வினா எண் 9833) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோதையாறு மேம்பாட்டுத் திட்டம் என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மேம்பாட்டிற்கான திருத்திய திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்ட மதிப்பீடு எவ்வளவு? எத்தனை நீரேற்றுத் திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் கோதையாறு மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும்? குமரி மாவட்ட விவசாயி களின் விழி நீரைத் துடைக்கின்ற வகையில் நடப்பு ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமெரிக்காவின் உதவியோடு செயலாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துகொண்டு இருக்கிறோம். சென்ற ஆண்